14-11-14 Dinathanthi

# சென்னையில், மார்ச் மாதம் மெட்ரோ ரெயில் ஓடும்

## மத்திய மந்திரி வெங்கையா நாயுடு பேட்டி

சென்னை, நவ.14– சென்னையில் அடுத்த ஆண்டு மார்ச் மாதம் மெட்ரோ ரெயில் இயங்கத்தொடங்கும் என்று மத்திய மந்திரி வெங்கையா நாயுடு கூறினார்.

### வெங்கையா நாயுடு

சென்னை தரமணியில் உள்ள மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனத்தில் நேற்று நடைபெற்ற 2014–ம் ஆண்டுக்கான நாயுடு அம்மா விருது வழங்கும் விழாவில் மத்திய மந்திரி வெங்கையா நாயுடு கலந்து கொண்டார். நிகழ்ச்சி முடிந்ததும் நிருபர்களுக்கு அவர் பேட்டி அளித்தார்.

அப்போது அவர் கூறியதாவது:–

### குறுகிய மனப்பான்மை

மறைந்த பாரத பிரதமர் நேருவின் 125–வது பிறந்தநாள் நாளை (இன்று) கொண்டாடப்படுகிறது. ஆனால் இதை காங்கிரஸ் கட்சியினர் மட்டுமே கொண்டாடுகின்றனர். அவர் ஒரு தேசிய தலைவர். எனவே இந்த நிகழ்ச்சிக்கு பிரதமர் நரேந்திர மோடியையும் அவர்கள் அழைத்திருக்க வேண்டும். பிரதமரை அழைக்காதது காங்கிரஸ் கட்சியின் குறுகிய மனப்பான்மையை காட்டுகிறது.

தமிழக மீனவர்கள் பிரச்சினை குறித்து ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ உள்ளிட்ட தமிழக அரசியல் தலைவர்கள் கருத்து தெரிவித்து வருகிறார்கள். பா.ஜ.க. அரசை பொறுத்தவரை தமிழக மீனவர் பிரச்சினையில் என்னென்ன நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமோ? அத்தனை நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறோம்.

### மெட்ரோ ரெயில்

இது ஒரு நாட்டுக்கும் மற்றொரு நாட்டுக்கும் இடையேயான பிரச்சினை ஆகும். எனவே இரு நாடுகள் சார்பிலும் கலந்துபேசி இந்த பிரச்சினைக்கு தீர்வு காணப்படும். பா.ஜ.க. சார்பில் தூய்மை இந்தியா திட்டம் காந்தி வழியில் தொடங்கப்பட்டுள்ளது. இந்த தூய்மை இந்தியா திட்டம் அனைவருக்கும் பிடித்ததால் விளையாட்டு துறை, சினிமா துறையை சார்ந்தவர்களும் இதில் பங்கேற்று தூய்மை பணிகளை தங்கள் பகுதிகளில் மேற்கொண்டு வருகின்றனர். இந்த திட்டத்தை வரவேற்று காங்கிரஸ் கட்சியினரும் தூய்மை இந்தியா திட்டத்திற்கு வரவேண்டும்.

சென்னையில் மெட்ரோ ரெயில் பணிகள் விரைவாக நடந்து வருகிறது. அடுத்த ஆண்டு மார்ச் மாதம் அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டு மெட்ரோ ரெயில் இயக்கப்படும். பொது மக்கள் அனைவரும் பயணம் செய்யலாம்.

இவ்வாறு மத்திய மந்திரி வெங்கையா நாயுடு கூறினார்.

முன்னதாக வெங்கையாநாயுடு நேற்று மாலை விமானம் மூலம் சென்னை வந்தார். விமான நிலையத்தில் அவர் நிருபர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:–

### ராகுல் காந்தி

நிருபர் கேள்வி:– நாட்டை சுத்தம் செய்வதாக கூறி நாட்டில் அன்னிய முதலீடுகளை பெரும் அளவில் கொண்டு வந்து பிரதமர் மோடி அசுத்தம் செய்வதாக ராகுல்காந்தி கூறி உள்ளரே?

வெங்கையாநாயுடு பதில்:– ராகுல்காந்தியை பற்றி பாரதீய ஜனதா கட்சி கவலைப்படுவதில்லை. பிரதமர் மோடி மக்களுக்கு பெரிய அளவில் சேவை செய்திட நல்லாட்சி நடத்தி வருகிறார். காங்கிரஸ் கட்சியை மக்கள் ஒதுக்கிவிட்டனர். இதற்கு சாட்சியாக மராட்டியம் மற்றும் அரியானா சட்டசபை தேர்தல்களில் 3–வது இடத்துக்கு காங்கிரஸ் கட்சியை மக்கள் ஒதுக்கி தள்ளிவிட்டனர். பிரதமர் மோடி மக்களுக்கு சேவை செய்ய பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி வருகிறார். காங்கிரஸ் கட்சி அழிவில் மூழ்கும் கப்பல். கட்சியை காப்பாற்ற ஏதாவது பேசிக் கொண்டு இருப்பார்கள்.

### ஒபாமா பாராட்டு

கேள்வி:– இந்தியாவில் அன்னிய முதலீடு வருவதற்கு வழி வகுப்பதால் பிரதமர் மோடியை அமெரிக்க அதிபர் ஒபாமா பாராட்டினாரா?

கேள்வி:– பிரதமர் மோடி கடினமான உழைப்பாளி. மக்களின் வளர்ச்சிக்காக பாடுபட்டு கொண்டு இருக்கிறார். பிரதமர் மோடியின் பணியை பார்த்து உலக தலைவர்கள் பாராட்டி வருகின்றனர். அதுபோல்தான் ஒபாமா பாராட்டி உள்ளார். இரு நாட்டு தலைவர்கள் சந்திக்கும் போது பாராட்டிக் கொள்வது மரபுதான். இதற்கு உள்அர்த்தம் கற்பிப்பது சரியானதல்ல.

இவ்வாறு அவர் கூறினார்.